செங்கற்பட்டு மாவட்டம் கிழக்கரை சாலை.

*333 வின.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கரை சாலைக்கு 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் செல்லும் கிழக்கரை சாலைக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிற பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) கிழக்குக் கடற்கரையோரச் சாலைக்காக 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 2,83,272·50 செலவழிக்கப்பட்டது.

(இ) மதுராந்தகம் துணைக் கோட்டத்தில் மட்டும் ரூ. 1,82,785 செலவிடப்பட்டது. வட்ட வாரியான கணக்குகளை வைத்து வராததால், மதுராந்தகம் வட்டத்தில் செலவிட்டது பற்றிய தனிப்பட்ட கணக்குகளைக் கொடுக்க இயலவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தற்போது போடப்பட்டுள்ள கிழக் கடற்கரைச் சாலை கடற்கரையின் பக்கத்தில் போடப்பட்டிருப்பதாலும், புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் போக்குவரத்து அதிகமாகப் போக முடியவில்லை. உடனடியாக அதற்கு மெட்டல் போட்டு தார் ரோடாக்கும் அளவுக்குச் செயற் குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மெரினு கடற்கரையை அழகுபடுத்தல்.

*334 வின.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா —

சென்னை மெரினு கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் எதும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். ரூபாய் 75 இலட்சத்துக்கு மேற்பட்ட மதிப்பீட்டுச் செலவில் மெரினு கடற்கரையை விரிவான அடிப்படையில் மேம்படுத்த வேண்டும் என்று இயற்கைக் காட்சி செயல்படுத்துக்குழு பரிவுரை செய்தது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகும் செலவு மிக அதிகம் என்று கருதப்பட்டதால், இப்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அலங்கார வகைச் செடிகள் வளர்க்கப்பட்டு தற்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் இன்னும் சிறிது அதிக நிதி ஒதுக்கத்தைக் கொண்டு மெரினு கடற்கரையை எழில்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். குடிசைகளை மெரினு கடற்கரையிலிருந்து அகற்றவும், கட்டுமரங்களையும் மீன் பிடி வலைகளையும் ஒழுங்காக விட்டு வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. கே. விநயகம் : மெரினு கடற்கரையின் ஒரு பகுதியில் "லவர்ஸ் பார்க்" என்று இருக்கிறது. அதிலே மற்றவர்கள் பிரவேசிக்காமல், சுதந்திரமாக இருக்கும் வகையில் அந்த நிலைமையை மாற்றுமல், அதிலே தலையிடாமல் இருக்க வழி செய்வார்களா ?